

புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் தமிழ்நாடு வனத்துறையின் சார்பில் புதுக்கோட்டை வனக்கோட்டத்தின் கீழ் பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழாவினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்தார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வன அலுவலர் எஸ்.கணேசலிங்கம், அரசு பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. ஜி.விமலா, வனச்சரக அலுவலர் மு.சதாசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கும்பகோணம், வலையப்பேட்டையில் அமைந்துள்ள கலைஞர் கோட்டம் திறக்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றதையடுத்து அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு கழக சட்டத்திட்டக் குழு உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.முத்துசெல்வம், ஒன்றிய நிர்வாகிகள் இளங்கோவன், பன்னீர்செல்வம், செல்வம், அன்பழகன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோட்டை பகுதி கழகத்தின் சார்பில் திருநகர் காலனி கோட்டை பகுதி கழக அலுவலகம் முன்பு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ படத்திற்கு பகுதி கழக செயலாளர் பொ.இராமசந்திரன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார் .அதுபோது காவேரி சாலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு மெசின் (R O) வழங்கப்பட்டது. நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் இரா. ஜெயந்தி, புவனேஸ்வரி, பகுதி கழக நிர்வாகிகள் பாலசுந்தரம், வேலுமணி, மீனாட்சி சுந்தரம், அண்ணாதுரை, சந்துரு, வட்டக்கழக செயலாளர்கள் பூபாலன், பிரகாஷ், பாலன், மகளிரனி நிர்வாகிகள் நவமணி, சிவகாமி, மகேஸ்வரி, நிர்மலா, கவிதா, அம்மு, லட்சுமி, ஜென்னத்துநிசா, ராமநாதன், சுல்தான், ஆறுமுகம், தங்கவேல், அம்பலவாணன், பாபு, மணிகண்டன், கணேசன், ரங்கதுரை, பிரசன்னா, முத்துசாமி, புவனேஸ்வரன், வெள்ளியங்கிரி, ஜெகதீசன், முருகன், லோகநாதன், அழகர்சாமி, தங்கவேல், சுந்தரம், சுந்தர்ராஜன், மூர்த்தி, ஆட்டோ சிவக்குமார், சுப்பிரமணியம், சீனிவாசன், கதிரவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஓசூர் மாநகராட்சி கூட்டம் மேயர் சத்யா தலைமையில் நடைபெற்றது. துணை மேயர் ஆனந்தைய்யா ஆணையாளர் சபீர் ஆலம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் மேயர் சத்யா பேசுகையில், ஓசூர் மாநகராட்சி உட்பட்ட பகுதிகளில் பத்தாண்டுக்கு மேலாக வசித்து வரும் மக்களுக்கு முதற்கட்டமாக 2776 நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கிய கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணிக்கும் நன்றி தெரிவித்தும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு ஓசூரில் முழு திருவுருவச் சிலை வைப்பதற்கும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாதேஸ்வரன் உள்ளிட்ட கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தெலுங்கானா முதலமைச்சர் ஆகியோர் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்னும் 2025–2026 ஆம் கல்வி ஆண்டிற்கான ”புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களை தொடங்கி வைத்த நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்டம் பாரத் கல்வியியல் கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.பிரியங்கா பங்கஜம், சு. கல்யாணசுந்தரம் எம்.பி., துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., ச.முரசொலி எம்.பி., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., மேயர்கள் சண். இராமநாதன், க.சரவணன், துணை மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி, சுப.தமிழழகன், சதய விழா குழு தலைவர் து.செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டார்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, நீடாமங்கலம் வடக்கு ஒன்றியம், வெள்ளக்குடி ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க. ஒன்றிய மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்து கொண்டனர். ஒன்றியச் செயலாளர்கள் நா.கவியரசு,கே.வி.கே.ஆனந்த் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



திருப்பூர் மாவட்டம். உடுமலைப்பேட்டை வட்டம், பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் சதீஷ்குமார், உடுமலை நகர கழக செயலாளர் செ.வேலுச்சாமி, உடுமலை வருவாய் கோட்டாட்சியர் குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், மாவட்ட பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், நகர்மன்றத்தலைவர் எம்.மத்தின் உள்பட ஒன்றிய கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தர்மபுரியில் நடைபெற்ற கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டத்தில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. மற்றும் இளைஞர் அணி மாநில துணைச்செயலாளர், TAHDCO தலைவர் இளையராஜா ஆகியோர் ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினர். கூட்டத்தில் நகரச் செயலாளர் நாட்டான். மாது, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அசோக்குமார், கே.ஆர்.சி.செல்வராஜ், ராஜகோபால், கலைச்செல்வன், கார்த்தி, முத்தமிழன் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள் உள்ளிட்ட திமுகவினர் பங்கேற்றனர்.



நாகை மாவட்ட தமிழ்நாடு பசுமை இயக்கம் சார்பில் 2000 மரக்கன்றுகளை நடும். நிகழ்ச்சி நாகை தாமரை குளத்தில் நடைபெற்றது மரக்கன்றுகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் நட்பு தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் ஆரூர். மணிவண்ணன், நாகை நகர தி.மு.க. செயலாளர் இரா. மாரிமுத்து, ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் சிக்கல் என்.ஆனந்த், செல்வ.செங்குட்டுவன், மாவட்ட வன அலுவலர் பார்கவதேஜா, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சுரேந்தர், சரவணன், விமல்மொக்கை மற்றும் பலர் உள்ளனர்.